DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.54/2022**

Deposition of witness for Prosecution அ.சா.6

Name : மேகநாதன்
Father/ Husband Name : நல்லபெருமாள்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 29.07.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது கள்ளிக்குடியில் குடியிருந்து ரியல்எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். கடந்த 07.12.2020-ம் தேதி மதியம் 3.00 மணிக்கு மேல் முனியய்யா கோவிலுக்கு அருகில் தேவகோட்டை நகர காவல் நிலைய போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயாரித்து விசாரித்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. எனக்கு சொந்த ஊர் கள்ளிக்குடி. கள்ளிக்குடி தேவகோட்டையிலிருந்து சுமார் 5 1/2 கி.மீ இருக்கும். நான் நிரந்தரமாக கள்ளிக்குடியில் தான் வசித்து வருகிறேன். நான் என் நண்பர் ராமச்சந்திரனை பார்ப்பதற்காக சென்று கொண்டிருந்த போது போலீசார் விசாரித்து கொண்டிருந்தார்கள். மேற்படி ராமச்சந்திரனின் வீடு எந்த வீதியில் உள்ளது என்றால் வீதி பெயர் தெரியாது, முனியய்யா கோவிலுக்கு எதிர்புறம் உள்ள வீதியில் வலதுபுறம் திரும்பி செல்லவேண்டும். முனியய்யா கோவிலுக்கும் சம்பவம்

நடந்த இடத்திற்கும் சுமார் 200 மீட்டர் இருக்கும். சம்பவம் நடைபெற்ற இடத்தில் கால்வாய் உள்ளதா என்றால் உள்ளது.

2. அ.சா.1 நிர்மலா என் நண்பனின் மனைவி. போலீசார் என்னிடம் சம்பவ இடத்தில் கையெழுத்து பெற்றார்கள். அ.சா.1 என் நண்பனின் மனைவி என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், நான் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து போட்டேன் என்றும், சம்பவ இடத்தை பற்றி எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.